# ECHO OF HIS CALL
# அழைப்பின் எதிரொலி

Tamil

₹ 10/-

ECHO OF HIS CALL 1969-2019 GOLDEN JUBILEE (ECHO GROUP)

India's National Spiritual Newspaper

Published monthly in ENGLISH, TAMIL, MALAYALAM, TELUGU, HINDI, KANNADA, MARATHI, BENGALI, GUJARATI, ODIYA, ASSAMESE, PUNJABI, NEPALI, URDU, SINHALA & AFRIKAN

Editor : S. SAM SELVA RAJ | 16 Languages | Senior Associate Editor: SIS. SERENA BEVIN

Vol. XXVII DECEMBER 2022 No. 12


## பரிசுத்த வேதாகமம்

இப்பகுதியை மனப்பாடம் செய்யவும்.

**லூக்கா 1:26-35**

26. ஆறாம் மாதத்திலே காபிரியேல் என்னும் தூதன், கலிலேயாவிலுள்ள நாசரேத் தென்னும் ஊரில்,

27. தாவீதின் வம்சத்தானாகிய யோசேப்பு என்கிற நாமமுள்ள புருஷனுக்கு நியமிக்கப்பட்டிருந்த ஒரு கன்னிகை யினிடத்திற்கு தேவனாலே அனுப்பப் பட்டான்; அந்தக் கன்னிகையின் பேர் மரியாள்.

28. அவள் இருந்த வீட்டில் தேவதூதன் பிரவேசித்து: கிருபை பெற்றவளே, வாழ்க, கர்த்தர் உன்னுடனே இருக்கிறார், ஸ்திரீ களுக்குள்ளே நீ ஆசீர்வதிக்கப்பட்டவள் என்றான்.

29. அவளோ அவனைக் கண்டு, அவன் வார்த்தையினால் கலங்கி, இந்த வாழ்த்து தல் எப்படிப்பட்டதோ என்று சிந்தித்துக் கொண்டிருந்தாள்.

30. தேவதூதன் அவளை நோக்கி: மரியாளே, பயப்படாதே; நீ தேவனிடத்தில் கிருபை பெற்றாய்.

31. இதோ, நீ கர்ப்பவதியாகி ஒரு குமாரனைப் பெறுவாய், அவருக்கு இயேசு என்று பேரிடுவாயாக.

32. அவர் பெரியவராயிருப்பார், உன்னத மானவருடைய குமாரன் என்னப்படுவார்; கர்த்தராகிய தேவன் அவருடைய பிதாவாகிய தாவீதின் சிங்காசனத்தை அவருக்குக் கொடுப்பார்.

33. அவர் யாக்கோபின் குடும்பத்தாரை என்றென்றைக்கும் அரசாளுவார்; அவருடைய ராஜ்யத்துக்கு முடிவிராது என்றான்.

34. அதற்கு மரியாள் தேவதூதனை நோக்கி: இது எப்படியாகும்? புருஷனை அறியேனே என்றாள்.

35. தேவதூதன் அவளுக்குப் பிரதியுத்தர மாக: பரிசுத்த ஆவி உன்மேல் வரும்; உன்னதமானவருடைய பலம் உன்மேல் நிழலிடும்; ஆதலால் உன்னிடத்தில் பிறக்கும் பரிசுத்தமுள்ளது தேவனுடைய குமாரன் என்னப்படும்.



# கிறிஸ்து பிறப்பின் ஆசீர்வாதங்கள்!


போதகர் கே. ஆர். ராஜசேகரன்


முதல் கிறிஸ்மஸ் நாளை ஏறத்தாழ முழு உலகமும் எண்ணிக்கூட பார்க்கவில்லை; அன்று என்ன நடந்ததென்று அவர்களுக்குத் தெரியாது; அந்த நாளின் முக்கியத்துவத்தையும் ஒருவரும் அறிந்திலர். ஒரு சிலர் மட்டும் அந்நாளில் நடைபெற்ற சம்பவங்களை அறிந்திருந்தனர். ஆனால் இன்று 2000 ஆண்டுகள் கழித்து முழு உலகமும் கிறிஸ்மஸ் தினத்தைப் பற்றி நன்கு அறிந்துள்ளது. இலட்சக்கணக்கான மக்கள் அன்று தங்களது ஆலய ஆராதனைக்குச் சென்று கிறிஸ்துவின் பிறப்பைக் கொண்டாடி மகிழ்கின்றனர். முதல் கிறிஸ்மஸ் தினத்தைக் குறித்து அறிந்திருந்த வெகு சிலரில் மரியாள், யோசேப்பு, மேய்ப்பர்கள் மற்றும் வான சாஸ்திரிகள் இன்றியமையாதவர் களாவர். தேவன் அவர்களை ஆசீர்வதிக்கும் படித் தெரிந்தெடுத்ததே, முதல் கிறிஸ்மஸ் தினத்தை அவர்கள் அறிந்திருந்ததற்குக் காரணம் ஆகும். தேவன் தாம் தெரிந்து கொண்டவர்களை ஆசீர்வதித்து, மற்றவர்க ளுக்கும் ஆசீர்வாதமாய் மாற்றுகிறார். மரியாள், யோசேப்பு, மேய்ப்பர்கள், வான சாஸ்திரிகள் ஆகிய நால்வரும் தேவனால் ஆசீர்வதிக் கப்படும்படி செயல்பட்டனர்; நாமும் கிறிஸ்மஸ் நாளின் ஆசீர்வாதங்களைப் பெற்றுக் கொள்ளும்படி செயல்படுவோமாக!

## 1. தேவனுடைய திட்டத்திற்கு ஒத்துழைத்த யோசேப்பு!

**இயேசு கிறிஸ்துவினுடைய ஜெநநத்தின் விவரமாவது: அவருடைய தாயாகிய மரியாள் யோசேப்புக்கு நியமிக்கப்பட்டிருக்கையில், அவர்கள் கூடிவருமுன்னே, அவள் பரிசுத்த ஆவியினாலே கர்ப்பவதியானாள் என்று காணப்பட்டது. அவள் புருஷனாகிய யோசேப்பு நீதிமானாயிருந்து, அவளை அவமானப்படுத்த மனதில்லாமல், இரகசியமாய் அவளைத் தள்ளிவிட யோசனையாயிருந்தான். அவன் இப்படிச் சிந்தித்துக்கொண்டிருக்கையில், கர்த்தருடைய தூதன் சொப்பனத்தில் அவனுக்குக் காணப்பட்டு: "தாவீதின் குமாரனாகிய யோசேப்பே, உன் மனைவியாகிய மரியாளைச் சேர்த்துக்கொள்ள ஐயப்படாதே; அவளிடத்தில் உற்பத்தியாயிருக்கிறது பரிசுத்த ஆவியினால் உண்டானது. அவள் ஒரு குமாரனைப் பெறுவாள், அவருக்கு இயேசு என்று பேரிடுவாயாக; ஏனெனில் அவர் தமது ஜனங்களின் பாவங்களை நீக்கி அவர்களை இரட்சிப்பார்" என்றான். தீர்க்கதரிசியின் மூலமாய்க் கர்த்தராலே உரைக்கப்பட்டது நிறைவேறும்படி இதெல்லாம் நடந்தது. அவன்: "இதோ, ஒரு கன்னிகை கர்ப்பவதியாகி ஒரு குமாரனைப் பெறுவாள்; அவருக்கு இம்மானுவேல் என்று பேரிடுவார்கள்" என்று சொன்னான். இம்மானு வேல் என்பதற்குத் 'தேவன் நம்மோடிருக்கிறார்' என்று அர்த்தமாம். யோசேப்பு நித்திரை தெளிந்து எழுந்து, கர்த்தருடைய தூதன் தனக்குக் கட்டளையிட்டபடியே தன் மனைவியைச் சேர்த்துக்கொண்டு** மத்தேயு 1:18-24.

கிறிஸ்மஸ் சம்பவத்தைப் பொறுத்த மட்டில் மிகவும் குறைத்து மதிக்கப்பட்ட, இன்றும் மறந்தே விட்ட கதாபாத்திரந்தான் யோசேப்பு. தாவீதின் சந்ததியில் உள்ள அவரைப் பற்றிய


தொடர்ச்சி 4-ம் பக்கம்.....

# ECHO OF HIS CALL - (1969-2019 GOLDEN JUBILEE YEAR)



## உங்கள் அன்பு சகோதரனிடமிருந்து...



### OUR MISSION POLICY

We should expound and teach the contemporary generation the undiluted teachings of the ancient and early Apostles. It is the need of the hour.


CHIEF EDITOR
Angeline Selvakumari Henry, M.A., M.Ed.

MANAGING EDITOR
Pastor Alex Samson Sam, B.Th., M.Div.

ADMINISTRATION
Bro. N. Prakasam, M.A., General Manager

EDITORIAL BOARD
Sis. Jesy Veena Sam
Sis. Serena Bevin, M.A., M.Phil., B.Ed.
Rev. Dr. K.R. Rajasekaran
Dr. A. Richard Samuel, M.A., Ph.D.



EDITOR, PUBLISHER & PRINTER
Pastor S. SAM SELVA RAJ
Echo of His Call Printers
10, Mohammed Abdullah 2nd Street,
Chepauk, Chennai- 600 005, India.
Phone : (+ 91- 44) 2852 8282, 2852 9293, 2854 7766
Cell : (+91) 98410 71852, 95661 31858



CORE LEADERS
Bro. K. Puratchivendan
Bro. A. Edward Durai
Bro. A. Alvin
Bro. K. Abraham
Sis. Dhanalakshmi Chinnaiah



E.mail ID
sam@echoofhiscall.org
biblecor@yahoo.co.in

WEBSITES
www.echoofhiscall.org
www.stpaulsmatriculation.com

YOUTUBE CHANNEL
Echo of His Call


**.... இன்றைக்கு நீங்கள் காண்கிற எகிப்தியரை இனி என்றைக்கும் காண மாட்டீர்கள்!**
**– யாத்திராகமம் 14:13.**

*கிறிஸ்துவுக்குள் பிரியமான சகோதர, சகோதரிகளுக்கு!*


நம்முடைய பிதாவாகிய தேவனால் உங்களுக்குக் கிருபையும், சமாதானமும் உண்டாவதாக. இந்த ஆண்டு முழுவதும் நம்மை ஆசீர்வதித்த தேவன், வருகின்ற புதிய 2023-ம் ஆண்டிலும் உங்களோடிருப்பாராக. தேவனுடைய கிருபையால் நீங்கள் சுகமாயிருப்பீர்களென்று விசுவாசித்து, உங்களனைவரையும் எங்கள் ஜெபங்களில் தொடர்ந்து நினைவு கூருகிறோம். கர்த்தர் மெய்யாகவே வரும் நாட்களில் உங்களுக்குப் பெரிய காரியங்களைச் செய்வார். ஓர் அற்புதத்திற்காக இன்றே அவரை விசுவாசியுங்கள்.



நமது நெகேமியா வேதாகமக் கல்லூரி மாணவர்கள்

இந்தியாவிலும், அண்டை நாடுகளிலுமுள்ள சந்திக்கப்படாத மக்களைச் சென்றடைவதில் மிகவும் பிரயாசப்பட்டுக் கொண்டு இருக்கிறோம்; அதே வேளையில் நமது **நெகேமியா வேதாகமக் கல்லூரி** மாணவர்களையும் ஒரு பெரும் அறுவடைக்காக ஆயத்தமாக்கிக் கொண்டிருக்கிறோம். அவர்கள் மகிழ்ச்சியுடன் வேதத்தைக் கற்றுக்கொண்டு, களப்பயிற்சியிலும் ஈடுபட்டுள்ளனர். வேதாகமக் கல்லூரிக்காக நாங்கள் எடுக்கும் முயற்சிகளுக்கு நீங்கள் ஏறெடுக்கும் ஜெபங்களுக்கும், ஆதரவுக்கும் மிக்க நன்றி. தொடர்ந்து ஜெபிக்க வேண்டுகிறோம்.

அண்மையில் தென்னிந்தியப் பகுதியில் நான் மேற்கொண்ட பயணங்களில் நமது உடன் ஊழியர்கள் சிலருடன் நமது உறவைப் பெலப்படுத்த முடிந்தது. அவர்களது



போதகர் ஜேக்கப் ஜெயக்குமார், நமது சுவிசேஷ கைப்பிரதிகள் விநியோகிப்பாளர், விழுப்புரம்



சகோ. சாலமன் மனோகரன், தொழிலதிபர், 99 K.M. காபி மேஜிக் & கிராம போதகர், முல்லைவண்ணன் நமது வேதாகமத் தபால் கல்வி பட்டதாரி, செய்யூர்



போதகர் ஜெப டேனியல், வள்ளியூர்



போதகர் ஸ்டீபன் கார்த்திக், விருதுநகர்

பகுதியில் நடைபெறும் சுவிசேஷப் பணிக்கு இலவச விநியோகத்திற்கென கைப்பிரதிகளும், சுவிசேஷப் புத்தகங்களும் அவர்களுக்கு அளிக்கப்பட்டன. அயராது அச்சகப் பணியில் ஈடுபட்டுள்ள நமது **அழைப்பின் எதிரொலி** சுவிசேஷ அச்சகப் பணியாளர்களுக்காக ஆண்டவரைத் துதிக்கிறோம்.


**சகோதரி ஏஞ்சலின் செல்வகுமாரி**


**போதகர் டாக்டர் சன்னி பிரசாத்**


**போதகர் டாக்டர் ஆனந்த் பாபு**

பல்வேறு இடங்களில் நாம் நடத்திய வாலிபர் சிறப்புக் கருத்தரங்குகளில் சகோதரி ஏஞ்சலின் செல்வகுமாரி, போதகர் டாக்டர் சன்னிபிரசாத், போதகர் டாக்டர் ஆனந்த்பாபு மற்றும் பலரை தேவன் பயன்படுத்தினார்.

பிரியமான நண்பர்களே! இங்கு ஊழியம் செய்வது எளிதல்ல. நமது ஊழியர்களின் குடும்பங்களில் வியாதிகள், பிசாசின் தாக்குதல்கள், அரசியல் பிரச்சினைகள், கிறிஸ்தவத்திற்கு எதிரான சக்திகள், பொருளாதார நெருக்கம் போன்ற விவரிக்க இயலாத போராட்டங்கள் எங்களுக்கு உண்டு; நாங்கள் மட்டுமல்ல, உண்மை ஊழியர்கள் அனைவருமே கடினமான சூழ்நிலைகளில்தான் போராடிக் கொண்டிருக்கின்றனர். உங்களைப் போன்ற மக்களின் ஜெபமும், ஆதரவுமின்றி சந்திக்கப்படாத மக்களைச் சென்றடைவது கடினமே; ஆகையால், நீங்கள் எங்களுக்காகச் செய்ய வேண்டியவை:

1. எங்களுக்காகவும், உங்களுக்குத் தெரிந்த மற்ற எல்லா ஊழியர்களுக்காகவும், இந்தியாவிலும், அண்டைநாடுகளிலும் உள்ள எல்லாத் திருச்சபைகளுக்காகவும் பாகுபாடின்றி உங்கள் ஜெபநேரத்தை அதிகரியுங்கள்.

2. நமது **அழைப்பின் எதிரொலி ஊழியத்தில்** போதகர்களாகவும், சுவிசேஷகர்களாகவும், இசை வாசிப்பாளர்களாகவும், **செயின்ட் பால்ஸ் மெட்ரிகுலேஷன் பள்ளியில்** ஆசிரியர்களாகவும், **நெகேமியா வேதாகமக் கல்லூரியில்** விரிவுரையாளர்களாகவும், மேலும் அலுவலகத்தில் நிர்வாகப் பணியாளர்களாகவும், மேலாளர்களாகவும், தொழில்நுட்பப் பணியாளர்களாகவும் பணியாற்ற முன்வரும்படி கேட்டுக்கொள்கிறோம்.

3. நமது ஊழியர்களின் அடிப்படைத் தேவைகள் சந்திக்கப்படவும், உயர்ந்து கொண்டே போகும் அச்சகம் மற்றும் எழுதுபொருள் செலவினங்கள், தபால் செலவுகள், கட்டட வாடகைகள், பராமரிப்புச் செலவுகள் ஆகியவற்றை மனதில் கொண்டு தேவ நடத்துதலின்படி உங்கள் காணிக்கை மற்றும் நன்கொடைகளைக் கூடுமானால் சற்று அதிகரிக்கும்படி அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.



## பகுதிக் கூடுகைகள்

கொரானா வியாதியின் போது ஞாயிறு ஆராதனைகள் தடைப்பட்டன. ஆகையால், அதன் பின்பும் சபை கூடிவரத் தயங்கும் மக்களை ஆராதனைகளில் பங்கெடுக்க ஊக்கப்படுத்தும்படி வெள்ளிக்கிழமைதோறும் மாலை 6.00 முதல் 7.30 மணி வரை விசுவாசிகள் வசிக்கும் பகுதிகளில் சிறு குழுத் தலைவர்களுடன் கூட்டங்கள் நடத்தி வருகிறோம். விசுவாசிகளை குடும்பம், குடும்பமாக அழைத்து, அவர்களின் பிரச்சினைகளை பகிர்ந்து கொண்டு, அவர்களுக்காக தனித்தனியே ஜெபித்து உற்சாகப்படுத்தி வருகிறோம். இம்முயற்சி மிகவும் பயனுள்ளதாக உள்ளது. ஆராதனைகளில் கலந்து கொள்பவர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. கர்த்தருக்கு மகிமையுண்டாவதாக.

கடந்த வருடங்களில் கொரோனாப் பெருந்தொற்றால் பாதிக்கப்பட்ட ஏழை மக்களுக்கு மதவேறுபாடின்றி சிறு உதவிகளைச் செய்ய கர்த்தர் கிருபை பாராட்டினார். இப்பொழுதும் கொரோனா பெருந்தொற்றின் பின்விளைவுகளாலும், பிற வியாதிகளினாலும் மக்கள் துன்புறுகின்றனர். ஏழை எளியோருக்கும், சமுதாயத்தில் பின்தங்கிய மக்களுக்கும் கல்வி, மருத்துவ சேவைகளுக்கு உதவிசெய்ய நமக்குப் பொருளாதார உதவிகள் தேவைப்படுகின்றன. இத்தேவைகள் சந்திக்கப்பட தேவன் உங்களைப் போன்ற சிலரை எழுப்பும்படி ஜெபிக்கின்றோம். கர்த்தர் உங்கள் உள்ளத்தில் அளிக்கும் ஏவுதலின்படி நீங்கள் இத்தேவைகளுக்கு மட்டும் உதவி செய்ய விரும்பினால் **Echo of His Call Educational Trust** என்ற பெயரில் காசோலை / கேட்புக் காசோலை அனுப்பலாம். (இந்திய நன்கொடையாளர்களுக்கு 80G வருமான வரிவிலக்கு இரசீது அளிக்கப்படும்) **அழைப்பின் எதிரொலி கல்வி அறக்கட்டளை** ஓர் அரசு அங்கீகாரம் பெற்ற நிறுவனமாகும்.

உங்கள் தேவைகளுக்காக ஜெபிக்கிறோம். வருகிற 2023-ம் ஆண்டில் தேவன் உங்களை அபரிமிதமாக ஆசீர்வதித்து புதுபெலன், வல்லமை, ஞானம், நீண்ட ஆயுளுடன் முன்னேறிச் செல்ல உங்களை வாழ்த்துகிறோம்.

**கர்த்தர் உன்னை ஆசீர்வதித்து, உன்னைக் காக்கக்கடவர். கர்த்தர் தம்முடைய முகத்தை உன்மேல் பிரகாசிக்கப்பண்ணி, உன்மேல் கிருபையாயிருக்கக்கடவர். கர்த்தர் தம்முடைய முகத்தை உன்மேல் பிரசன்னமாக்கி, உனக்குச் சமாதானம் கட்டளையிடக்கடவர்...** எண்ணாகமம் 6:24-26.

கிறிஸ்து இயேசுவுக்குள் உங்கள் ஊழியர்கள்,
**போதகர் எஸ். சாம் செல்வ ராஜ் & அலெக்ஸ் சாம்சன் சாம்.**
(+91) 98412 71858 / 98410 71858
மின்னஞ்சல் : samselvaraj333@gmail.com

... 1-ம் பக்கத் தொடர்ச்சி

விவரங்கள் தவிர வேறு ஒன்றும் நமக்குத் தெரியாது. ஆனால் யோசேப்பு மிக எளிமையான நபரும், இளைஞனுமாயிருந்த ஏழையான மனிதர். அவர் நாசரேத்துக் கிராமத்தில் எளிய தச்சு வேலை செய்பவனாயிருந்தார். மேலும் மரியாள் அவருக்கு நிச்சயிக்கப்பட்டிருந்தாள் என்று மட்டும் நமக்குத் தெரியும்; நிச்சயத்திற்குப் பின்பு அவர்கள் கூடி வாழும் முன்பே மரியாள் பரிசுத்த ஆவியால் கருவுற்றிருந்தாள்.

நண்பர்களே! மிகவும் அபத்தமான, திடுக்கிடும் இதுபோன்ற சம்பவம் உங்களுக்கு நடைபெற்றிருந்தால் எப்படியிருக்கும்? ஆனால் அது நடந்து விட்டது. யோசேப்புக்கு இது ஒரு சோதனை. நீதிமானாயிருந்த யோசேப்பு மரியாளை இகழ்ச்சிக்கு உள்ளாக்க விரும்பாமல் மறைவாக விலக்கிவிடத் திட்டமிட்டார். **அவள் புருஷனாகிய யோசேப்பு நீதிமானாயிருந்து, அவளை அவமானப்படுத்த மனதில்லாமல், இரகசியமாய் அவளைத் தள்ளிவிட யோசனையாயிருந்தான்.** மத்தேயு 1:19. அந்நாட்களில் நிச்சயதார்த்தம் என்பது திருமணத்தைப் போன்றதாகும்; அது சட்டத்தின்படியானதாகும்; எளிதாக திருமண நிச்சயத்தை உடைக்க இயலாது; ஆகையால்தான் யோசேப்பு ரகசியமாக மரியாளைத் தள்ளிவிடத் திட்டமிட்டார். ஆனால் ஆண்டவரின் தூதர் யோசேப்பின் கனவில் தோன்றி மரியாளைச் சேர்த்துக் கொள்ள அஞ்சவேண்டாம் எனக் கூறினார். தேவதூதன் சொன்னபடியே கீழ்ப்படிந்து யோசேப்பு, மரியாளைத் தம் மனைவியாக ஏற்றுக் கொண்டார். **யோசேப்பு நித்திரை தெளிந்து எழுந்து, கர்த்தருடைய தூதன் தனக்குக் கட்டளையிட்டபடியே தன் மனைவியைச் சேர்த்துக்கொண்டு,** மத்தேயு 1:24. மிகவும் சாத்தியமற்ற ஒன்றை தேவ வார்த்தையின்படி ஏற்றுக் கொள்வதற்கும், தனது கற்பனையை விட தேவனது திட்டமே தனது வாழ்க்கைக்குச் சிறந்ததென ஏற்றுக் கொள்ளவும் மாபெரும் விசுவாசம் தேவைப்படுகிறது.

### நாம் கவனிக்க வேண்டிய முதல் குறிப்பு:

உங்களது வாழ்க்கையில், வேலையில், உறவுகளில், திருமணத்தில், நட்பில், பொருளாதாரத்தில் தேவனது ஆசீர்வாதத்தைப் பெற்றிட, யோசேப்பைப் போல தேவனது திட்டத்துடன் ஒத்துழைக்க வேண்டும்; உங்களது எண்ணத்தின்படி வாழ்வதை நிறுத்துங்கள். யோசேப்பின் வாழ்வில் இது ஒரு முழுமையான திருப்பமாகும்; அவர் மரியாளுடனான வாழ்க்கையைத் திட்டமிட்டு வைத்திருந்தார்; ஆனால் தேவனது திட்டமோ அதைவிடச் சிறந்ததும், மேன்மையானதுமாயிருந்தது. நீங்கள் புரிந்து கொள்ள இயலாவிட்டாலும், தேவனது திட்டத்துடன் ஒன்றிணைந்து செல்வதே சிறந்தது. பின்பு அதன் ஆசீர்வாதத்தைப் புரிந்து கொள்வோம்.

பிரியமான நண்பர்களே! தேவனுக்கு ஒரு பெரிய நோக்கம் உண்டு. உங்களுக்காக நான் வகுத்திருக்கும் திட்டங்கள் எனக்குத் தெரியும். அவை வளமான எதிர்காலத்தையும், நம்பிக்கையையும் உங்களுக்கு அளிப்பதற்கான நல்வாழ்வின் திட்டங்களே அன்றி, கேடு விளைவிப்பதற்கான திட்டங்கள் அல்ல என்கிறார் ஆண்டவர். **"நீங்கள் எதிர்பார்த்திருக்கும் முடிவை உங்களுக்குக் கொடுக்கும்படிக்கு நான் உங்கள் பேரில் நினைத்திருக்கிற நினைவுகளை அறிவேன்" என்று கர்த்தர் சொல்லுகிறார். அவைகள் தீமைக்கல்ல, சமாதானத்துக்கேதுவான நினைவுகளே.** எரேமியா 29:11. நல்லவராகிய நமது தேவனுடைய திட்டங்கள் நமக்கு எதிர்காலத்தையும், நம்பிக்கையும் அளிப்பவை. ஆகையால், உங்களையல்ல, தேவனது திட்டங்களை நம்புங்கள். தேவனது திட்டங்களுடன் நாம் ஒருங்கிணைந்து செல்வது தான் நமது வாழ்வின் ஆசீர்வாதத்திற்குத் திறவுகோலாகும். இதனால்தான் முதல் கிறிஸ்து பிறப்பின் நாளன்று யோசேப்பு ஆசீர்வதிக்கப்பட்டான். ஆகையால், யோசேப்பைப் போல, நமது வாழ்க்கைக்கு தேவனது திட்டத்துடன் ஒத்துழைப்போமாக.

## 2. கிறிஸ்துவின் பிறப்பைக் கொண்டாடிய மேய்ப்பர்கள்!

**தேவதூதன் அவர்களை நோக்கி: "பயப்படாதிருங்கள்; இதோ, எல்லா ஜனத்துக்கும் மிகுந்த சந்தோஷத்தை உண்டாக்கும் நற்செய்தியை உங்களுக்கு அறிவிக்கிறேன். இன்று கர்த்தராகிய கிறிஸ்து என்னும் இரட்சகர் உங்களுக்குத் தாவீதின் ஊரிலே பிறந்திருக்கிறார்"** லூக்கா 2:10–11. மேய்ப்பர்கள், சமுதாயத்தின் ஏணியில் அடிமட்டத்தில் இருப்பவர்கள். ரோமப் பேரரசின் நாட்களில் மேய்ப்பர்கள் தீண்டத்தகாதவர்களாக எண்ணப்பட்டார்கள்; அவர்கள் சிக்குப் பிடித்த முடியுடனும், அழுக்கு ஆடையுடனும் துர்நாற்றம் உடையவர்களாய் காணப்பட்டனர்.



தொடர்ச்சி 6-ம் பக்கம்.....


# நெகேமியா வேதாகமக் கல்லூரி, சென்னை.

வேளச்சேரி – முழுநேரம் – இந்தி
சேப்பாக்கம் – மாலை நேரம் – தமிழ்
(திங்கள், செவ்வாய், வியாழன்)

Registered Candidate for Membership
Asia Theological Association (ATA)

உலகத்தின் தலைசிறந்த கிறிஸ்தவ தலைவர்கள் மற்றும் போதகர்களின் நன்மதிப்பைப் பெற்ற 53 வருட அனுபவ ஸ்தாபனம்.

**Certificate in Theology : ஒரு வருடம்**
**Diploma in Theology : இரண்டு வருடங்கள்**

**கல்வித்தகுதி : 10ம் வகுப்பு மற்றும் அதற்கு மேல்**

**உடனே அணுகவும் !**

தொடர்புக்கு : போதகர் எஸ். சாம் செல்வ ராஜ், நெகேமியா வேதாகமக் கல்லூரி,
10, முகமது அப்துல்லா 2–வது தெரு, சேப்பாக்கம், சென்னை – 600 005.
தொலைபேசி: (+91–44) 2852 8282, கைபேசி: (+91) 98410 71852, 95661 31858
மின்னஞ்சல் : sam@echoofhiscall.org /இணையதளம் : www.echoofhiscall.org

ECHO OF HIS CALL MINISTRIES SINCE 1969

# பிரதானக் கட்டளைப் பங்காளர்



## GREAT COMMISSION PARTNERS - PRAISE & PRAYER POINTS

**பகிர்தல்** (Share) (கலாத்தியர் 6:2), **உதவி செய்தல்** (Support) (ரோமர் 12:13) மற்றும் **துரிதப்படுத்துதல்** (Speed up) (II தீமோத்தேயு 1:6)

**துதி மற்றும் ஜெப குறிப்புகள் . 2022 டிசம்பர் 19 முதல் ஜனவரி 18 வரை**

(இப்பகுதியைப் பிரித்தெடுத்து, மடித்து, உங்கள் வேதாகமத்தினுள் வைத்து தொடர்ந்து ஜெபியுங்கள்)

## தேவனுக்கு நன்றி செலுத்துங்கள்

- **டிசம்பர் 19** ⇨ நமது **சுவிசேஷத்தின் அச்சகத்தின்** தங்குதடையற்ற இயக்கத்திற்காகவும் அதற்கு காரணமாயிருக்கும் திறமையான ஊழியர்களுக்காகவும்...
- **டிசம்பர் 20** ⇨ நமது தலைமைப் போதகர் அவர்களையும், அவரது குடும்பத்தினரையும் எல்லாவித தீயசக்திகளிலிருந்தும் விலக்கிக் காத்துக் கொண்டதற்காக...
- **டிசம்பர் 21** ⇨ நமது அனைத்து இணை ஆசிரியர்களையும், அவர்களின் குடும்ப அங்கத்தினர்களையும் ஆசீர்வதித்து வருகிறதற்காக...
- **டிசம்பர் 22** ⇨ சுவிசேஷம் சென்றடையாத இடங்களுக்கு சுவிசேஷம் சென்றடைய கர்த்தர் கிருபையாய் உதவி செய்ததற்காக...
- **டிசம்பர் 23** ⇨ நமது **செயின்ட் பால்ஸ் மெட்ரிகுலேஷன் பள்ளி, நெகேமியா வேதாகமக்கல்லூரி** மற்றும் **அஞ்சல்வழி வேதாகமக்கல்வி** மூலமாக மாணவர்கள் பயனடைய...
- **டிசம்பர் 24** ⇨ நமது இணை ஆசிரியர்கள், உதவியாளர்கள் மற்றும் அவர்களுடைய குடும்பத்தினர்களை ஆசீர்வதித்து வருகிறதற்காக...
- **டிசம்பர் 25** ⇨ உலக இரட்சகராகிய இயேசு கிறிஸ்து அனைத்து ஜீவன்களையும் இரட்சிப்பதற்காக இப்பூவுலகில் பிறந்ததற்காக...
- **டிசம்பர் 26** ⇨ கொரானா வைரஸின் தாக்கம் குறைந்ததற்காக...
- **டிசம்பர் 27** ⇨ நமது பணியாளர்கள் அனைவரது குடும்பத்தினர் மீதும் கர்த்தருடைய ஆசீர்வாதம் பொழியப்பட்டதற்காக...
- **டிசம்பர் 28** ⇨ நமது மிஷனரி ஊழியர்களின் பெரிதான அர்ப்பணிப்பிற்காக ...
- **டிசம்பர் 29** ⇨ இவ்வருடம் முழுவதும் அனைத்து கிறிஸ்தவ நிறுவனங்கள் சுமூகமாக நடைபெற்றமைக்காக...
- **டிசம்பர் 30** ⇨ இந்த வருடம் முழுவதும் தேவ ஊழியர்களுக்கு கொடுத்த விசேஷித்த பாதுகாப்பிற்காக...
- **டிசம்பர் 31** ⇨ 2022ம் வருடத்திற்கான அனைத்து தேவைகளையும் அற்புதமாக தேவன் சந்தித்த கிருபைக்காக...
- **ஜனவரி 01** ⇨ உலகில் உள்ள நமது வாசகர்கள் மற்றும் மக்கள் 2022–ம் ஆண்டு முழுவதும் சமாதானத்துடன் இருந்ததற்காகவும், 2023–ம் வருடப்பிறப்பில் அடியெடுத்து வைப்பதற்காகவும்...
- **ஜனவரி 02** ⇨ நமது தலைமை மற்றும் கிளைச்சபைகளையும், விசுவாசிகளையும் ஆசீர்வதித்து வருகிறதற்காக...
- **ஜனவரி 03** ⇨ இப்புது வருடப்பிறப்பில் அனைத்து சபைகளுக்கும், சபையினர்களுக்கும் கொடுத்த நல்வாக்குத் தத்தங்களுக்காக...

## தேவனிடத்தில் ஜெபியுங்கள்

- **ஜனவரி 04** ⇨ நமது **அழைப்பின் எதிரொலி** ஊடக ஊழியத்திற்காக வீடியோ காமிரா வாங்குவதற்கு கிருபை செய்ய ...
- **ஜனவரி 05** ⇨ நமது **செயின்ட் பால்ஸ் மெட்ரிகுலேஷன் பள்ளி, நெகேமியா வேதாகமக்கல்லூரி** மற்றும் **அஞ்சல்வழி வேதாகமக்கல்வியின் முதல்வர்கள்,** ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் பணியாளர்களுக்காக...
- **ஜனவரி 06** ⇨ உலகத்திலுள்ள கிறிஸ்தவ கல்வி நிறுவனங்கள் நற்கீர்த்தியுடன் என்றென்றும் நிலைத்திருக்க...
- **ஜனவரி 07** ⇨ அனைத்து குடும்பங்களிலும் சமாதானம் நிலவ...
- **ஜனவரி 08** ⇨ உலக மக்களுக்கு புதுப்புது வியாதிகள் பரவாமல், அனைவரும் முழு ஆரோக்கியத்துடன் திகழ...
- **ஜனவரி 09** ⇨ உலக மக்களின் தனிமனித வருமானம் உயர்வதற்காக...
- **ஜனவரி 10** ⇨ உலகத்திலுள்ள கிறிஸ்தவ சபைகளுக்கு விரோதமான தீயசக்திகளிடமிருந்து விசேஷித்த பாதுகாப்பு கிடைப்பதற்காக ...
- **ஜனவரி 11** ⇨ உலகத் தலைவர்கள் அனைவரும் மக்களின் நலனை சிந்தித்து கர்த்தர் அருளிய ஞானத்துடன் செயல்பட ...
- **ஜனவரி 12** ⇨ கிறிஸ்தவ சபைகள் மற்றும் அமைப்புகள் அனைத்தும் அரசு அங்கீகாரம் பெற்று செயல்பட...
- **ஜனவரி 13** ⇨ இளைஞர்கள் மத்தியில் கிரியை செய்யும் வன்முறை மற்றும் கொலைவெறி ஆவிகள் நீக்கப்பட்டு பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட...
- **ஜனவரி 14** ⇨ உலக நாடுகளிடையே சமாதானம் நிலவி பொருளாதார மேம்பாடு அடைவதற்காக...
- **ஜனவரி 15** ⇨ நமது **அழைப்பின் எதிரொலியின்** பன்மொழி ஊழியங்கள் ஆசீர்வதிக்கப்படுவதற்காக...
- **ஜனவரி 16** ⇨ கிறிஸ்தவர்கள் கர்த்தரின் வேதவசனத்தை பின்–பற்றி, கிறிஸ்துவின் சாயலை அடைவதற்காக...
- **ஜனவரி 17** ⇨ 2023–ம் வருடத்திலும் போதகர் எஸ். சாம் செல்வராஜ் மற்றும் அவர்களது குடும்பத்தினரின் மீது நன்மைக்கேதுவான கர்த்தரின் கரம் இருப்பதற்காக...
- **ஜனவரி 18** ⇨ நமது ஜெபப்பங்காளர்கள், சந்தாதாரப் பங்காளர்கள், விசுவாசப் பங்காளர்கள், ஆயுள் பங்காளர்கள் மற்றும் பிரதானக் கட்டளைப் பங்காளர்கள் அனைவரையும், அவர்களது குடும்பத்தாரையும் கர்த்தர் ஆசீர்வதிக்க ...

... 4-ம் பக்கத் தொடர்ச்சி

சமுதாயத்தில் குறைவாக மதிக்கப்பட்ட மேய்ப்பர்களை இது போன்ற நிகழ்ச்சிகளுக்கு எவரும் அழைக்கமாட்டார்கள்; எனினும், உன்னதத்திலிருந்து அந்தத் தாழ்மையான மனிதர்களைத் தனது குமாரனின் பிறந்த நாளுக்கு கர்த்தர் அழைத்தார். அவர்கள் தங்களது மந்தையைக் கொடிய விலங்குகளிடமிருந்து காக்க, புல்வெளியில் உறங்கிக் கொண்டிருந்தனர். அப்பொழுது அப்பகுதியில் உள்ள வயல்வெளியில் இடையர்கள் தங்கி இரவெல்லாம் தங்கள் மந்தையைக் காத்துக் கொண்டிருந்தார்கள். அந்த வேளையில் கர்த்தருடைய தூதன் அவர்களிடத்தில் வந்து நின்றார். கர்த்தருடைய மகிமை அவர்களைச் சுற்றிலும் பிரகாசித்தது. **தேவதூதன் அவர்களை நோக்கி: "பயப்படாதிருங்கள்; இதோ, எல்லா ஜனத்துக்கும் மிகுந்த சந்தோஷத்தை உண்டாக்கும் நற்செய்தியை உங்களுக்கு அறிவிக்கிறேன்"** லூக்கா 2:10. தேவதூதன் தோன்றும் ஒவ்வொருமுறையும், 'பயப்படாதே' என்ற வார்த்தையுடன் ஆரம்பிப்பது சுவாரஸ்யமானது. ஏனென்றால், தேவதூதனைக் கண்டவர்கள், மரித்து விடுவோம் என்று பயந்தனர். கிறிஸ்துவின் பிறப்பு ஒரு குறிப்பிட்ட சாராருக்கு மட்டுமல்ல, எல்லா மக்களுக்கும் மிகுந்த சந்தோஷத்தை உண்டாக்கும் நற்செய்தியாகும்.

ஒரு சில மக்களுக்காக மட்டுமல்ல, எல்லோருக்காகவும் மரிக்கவே இயேசு கிறிஸ்து வெளிப்பட்டார். இதுதான் எல்லா மக்களுக்கும் நற்செய்தியாகும். இன்று கர்த்தராகிய இயேசு கிறிஸ்து என்னும் இரட்சகர் உங்களுக்குத் தாவீதின் ஊரிலே பிறந்திருக்கிறார். தேவதூதர்கள் அவர்களை விட்டுப் பரலோகத்துக்குப் போனபின்பு, மேய்ப்பர்கள் "நாம் பெத்லகேம் ஊருக்குப் போய் நடந்ததாகக் கர்த்தரால் நமக்கு அறிவிக்கப்பட்ட இந்த காரியத்தைப் பார்ப்போம் வாருங்கள் என்று சொல்லி, தீவிரமாய் வந்து, மரியாளையும் யோசேப்பையும் முன்னணையிலே கிடத்தியிருக்கிற பிள்ளையையும் கண்டார்கள். கண்டு அந்தப் பிள்ளையைக் குறித்துத் தங்களுக்குச் சொல்லப்பட்ட சங்கதியைப் பிரசித்தம் பண்ணினார்கள். மேய்ப்பரால் தங்களுக்குச் சொல்லப்பட்டதைக் கேட்ட யாவரும் அவைகளைக் குறித்து ஆச்சரியப்பட்டார்கள்"

**அந்தக்ஷணமே பரமசேனையின் திரள் அந்தத் தூதனுடனே தோன்றி: "உன்னதத்திலிருக்கிற தேவனுக்கு மகிமையும், பூமியிலே சமாதானமும், மனுஷர்மேல் பிரியமும் உண்டாவதாக" என்று சொல்லி, தேவனைத் துதித்தார்கள். தேவதூதர்கள் அவர்களை விட்டுப் பரலோகத்துக்குப் போனபின்பு, மேய்ப்பர்கள் ஒருவரையொருவர் நோக்கி: "நாம் பெத்லகேம் ஊருக்குப் போய், நடந்ததாகக் கர்த்தரால் நமக்கு அறிவிக்கப்பட்ட இந்தக் காரியத்தைப் பார்ப்போம் வாருங்கள்" என்று சொல்லி, தீவிரமாய் வந்து, மரியாளையும், யோசேப்பையும், முன்னணையிலே கிடத்தியிருக்கிற பிள்ளையையும் கண்டார்கள். கண்டு, அந்தப் பிள்ளையைக் குறித்துத் தங்களுக்குச் சொல்லப்பட்ட சங்கதியைப் பிரசித்தம் பண்ணினார்கள். மேய்ப்பராலே தங்களுக்குச் சொல்லப்பட்டதைக் கேட்ட யாவரும் அவைகளைக் குறித்து ஆச்சரியப்பட்டார்கள்.** லூக்கா 2:13–18.

பெத்லகேமுக்குத் தீவிரித்துச் சென்ற மேய்ப்பர்கள் அங்கு மரியாளையும், யோசேப்பையும், முன்னணையிலே கிடத்தியிருந்த பிள்ளையும் கண்டனர்; பிள்ளையைக் குறித்துத் தங்களுக்குச் சொல்லப்பட்ட செய்தியைக் குறித்து ஆச்சரியமடைந்தனர்; தேவனைத் துதித்து மகிழ்ச்சியுடன் தங்கள் இருப்பிடம் திரும்பினர். மற்றவர்களிடமும் அவைகளைப் பிரசித்தப்படுத்தினர். மேய்ப்பர்கள் கிறிஸ்துவின் பிறப்பை இவ்வாறு கொண்டாடினர். யோசேப்பு தேவனுடைய திட்டத்துடன் ஒத்துழைத்தார்; மேய்ப்பர்கள் கிறிஸ்துவைக் கொண்டாடிப் பிறருக்குப் பிரசித்தப்படுத்தினர். கிறிஸ்மஸ் ஒரு அடக்க ஆராதனையல்ல – அது ஒரு மகிழ்ச்சிப் பண்டிகை. ஆகையால்தான் நாம், "Merry Christmas" என்று வாழ்த்து கிறோம். எல்லா மக்களுக்கும் மிகுந்த சந்தோஷத்தின் செய்திதான் கிறிஸ்துவின் பிறப்பாகும். **"இன்று கர்த்தராகிய கிறிஸ்து என்னும் இரட்சகர் உங்களுக்குத் தாவீதின் ஊரிலே பிறந்திருக்கிறார்"** (லூக்கா 2:11) என்பதுதான் மிகச்சிறந்த நற்செய்தியாகும். பாவமன்னிப்பாகிய இரட்சிப்பும், வாழ்வதற்கு ஒரு நோக்கமும், பரலோகத்தில் ஓர் அரிய இடத்தையும் இயேசு கிறிஸ்து பிறப்பின் ஆசீர்வாதங்களால் நீங்கள் பெற்றுக் கொள்ளலாம். ஆகையால்தான் கிறிஸ்துமஸ் ஒரு மகிழ்ச்சியான காலம்.

## நாம் கவனிக்க வேண்டிய இரண்டாவது குறிப்பு:

நீங்கள் ஆசீர்வதிக்கப்பட்ட மேய்ப்பர்களைப் போல, தேவன் நம்மோடிருக்கிறார் என்பதைக் கொண்டாடி, பிறருக்கும் அதை அறிவிக்க வேண்டும்.

இன்று பலரும் கிறிஸ்மஸ் நாட்களைக் கொண்டாடுகின்றனர். அனைத்துக் களியாட்டங்களும் உண்டு. ஆனால், கிறிஸ்து இல்லாமலிருப்பதுதான் வேதனையான காரியமாகும். கிறிஸ்து பிறப்பின் கொண்டாட்டத்தின் நோக்கமே தேவன் நம்மோடிருக்கிறார்; நாம் தனிமையாக இல்லை; நமது வாழ்க்கையைக் குறித்து தேவனுக்கு ஒரு நோக்கமும், திட்டமும் உண்டு. அவர் உங்களை நேசித்து, உங்கள் பாவங்களை உங்களுக்கு மன்னிக்கிறார் என்பதாகும்.

மேய்ப்பர்கள் கொண்டாடி மகிழ்ந்தது மட்டுமல்ல, அவர்கள் தாங்கள் கண்டவைகளைப் பிரசித்தப்படுத்தினார்கள். நீங்கள் கிறிஸ்துவைப் பற்றிய நற்செய்தியை பிறருக்குக் கூறி எத்தனை காலமாயிற்று? உலகத்தில் உள்ள இந்த சிறந்த நற்செய்தியை நீங்கள் யாருக்காவது அறிவித்து உள்ளீர்களா? பாவ மன்னிப்பாகிய இரட்சிப்பு, நோக்கம் நிறைந்த ஓர் வாழ்க்கை, பரலோகத்தில் நித்திய வாழ்வு என்பதுதான் நம்மிடம் உள்ள நற்செய்தியாகும். கிறிஸ்துவை விசுவாசித்து, ஏற்றுக் கொள்ளும் எவருக்கும் இது சொந்தமாகும். நண்பர்களே, நீங்கள் இந்த நற்செய்தியைப் பிரசித்தப்படுத்து கிறீர்களா? மேய்ப்பர்கள் தங்களுக்குச் சொல்லப்பட்ட செய்தியை யாவருக்கும் பிரசித்தப்படுத்தினார்கள். ஆகையால், மேய்ப்பர்களைப் போல தேவன் நம்மோடிருக்கிறார் என்று கொண்டாடி மகிழ்ந்து, இரட்சிப்பின் நற்செய்தியை மற்றவர்களுக்கும் அறிவியுங்கள்.

## 3. இருதயத்தில் சிந்தித்த மரியாள்!

**மரியாளோ அந்தச் சங்கதிகளையெல்லாம் தன் இருதயத்திலே வைத்து, சிந்தனை பண்ணினாள்.** லூக்கா 2:19.

யோசேப்புக்கு நிச்சயிக்கப்பட்ட பின்பு திருமணத்திற்கு முன்பே கர்ப்பவதியானபோது மரியாளுக்கு பதிமூன்று வயதுதான்; அவள் தேவகுமாரனை சுமந்து கொண்டிருந்தாள். அதை யாரும் நம்பவில்லை. ஆனால், பதின் பருவத்திலிருந்த மரியாள் அச்சமடையவில்லை; ஏனெனில் அவள் தேவன் தனக்கு அளித்த வாக்குத்தத்தங்களைக் குறித்து மனதில் சிந்தித்துக் கொண்டிருந்தாள்; யோசேப்பு தேவ நோக்கத்துடன் ஒத்துழைத்தார்; மேய்ப்பர்கள் தேவனைக் கொண்டாடினர். மரியாளோ இருதயத்தில் சிந்தனை செய்தாள். அவள் தேவனுடய வார்த்தையை மனதில் வைத்து சிந்தித்துக் கொண்டிருந்தாள். பிள்ளையைக் குறித்து மேய்ப்பர்கள் சொன்ன யாவற்றையும் மற்ற அனைவரும் கேட்டனர். ஆச்சரியப் பட்டனர். ஆனால், மரியாளோ கேட்டவைகளையெல்லாம் மனதில் வைத்து அமைதியாகச் சிந்தித்துக் கொண்டிருந்தாள். மற்ற இளம்பெண்களைக் காட்டிலும், தேவன் மரியாளைத் தெரிந்து கொண்டு



ஆசீர்வதித்தார். காரணம் யாதெனில், அவள் தேவனுடைய வார்த்தையை வெறுமனே கேட்டதுமட்டுமின்றி அவற்றை மனதில் வைத்து சிந்தித்தாள், தியானித்தாள், நினைவு கூர்ந்தாள். மற்ற அனைவரும் தாங்கள் கேட்டவைகளைக் குறித்து ஆச்சரியமடைந்த னர். ஆனால், மரியாளோ மனதில் வைத்து அமைதியாகச் சிந்தித்துக் கொண்டிருந்தாள். என்னே ஒரு பெரிய வித்தியாசம் பாருங்கள்!

நண்பர்களே! நீங்களும் தேவனுடைய வார்த்தையின்படி செயல்படுகிறவர்களாயிருந் தால், நீங்கள் நினைத்துப் பார்க்க இயலாத அளவு ஆண்டவர் உங்களை ஆசீர்வதிக்க இயலும். நீங்கள் உலகத்தின்படி நடப்பவர்களா னால், அங்கு தேவவார்த்தைக்கு இடமில்லாத படியினால் தேவ ஆசீர்வாதத்திற்கு சாத்தியமேயில்லை. மரியாளைப் போல ஆசீர்வதிக்கப்பட நீங்கள் தேவனுடைய வார்த்தையைத் தொடர்ந்து தியானித்து, அதன்படி செயல்பட வேண்டும். தேவன் தனக்குச் சொன்ன வார்த்தைகளை மரியாள் சிந்தனை பண்ணிக் கொண்டிருந்தாள். மரியாளுக்கு மாத்திரமல்ல தேவனுடைய வார்த்தையை நேசித்து, கற்றுக்கொண்டு, அதன்படி வாழ்கின்ற ஒவ்வொருவருக்கும் அளிக்கப்படும் வாக்குத்தத்தம் இது. **சுயாதீனப்பிரமாணமாகிய பூரணப் பிரமாணத்தை உற்றுப்பார்த்து, அதிலே நிலைத்திருக்கிறவனே கேட்கிறதை மறக்கிறவனாயிராமல், அதற்கேற்ற கிரியை செய்கிறவனாயிருந்து, தன் செய்கையில் பாக்கியவானாயிருப்பான்.** யாக்கோபு 1:25.

உங்களுடைய வீட்டிலோ அல்லது அலுவலகத்திலோ வேதாகமத்தை வைத்திருந்தால் அல்ல, அதை வாசித்து, படித்து, மனனம் செய்து, தியானித்து, அதன்படி செய்தால் நிச்சயம் ஆசீர்வதிக்கப்படுவீர்கள். **“இந்த நியாயப்பிரமாண புஸ்தகம் உன் வாயைவிட்டுப் பிரியாதிருப்பதாக; இதில் எழுதியிருக்கிறவைகளின்படியெல்லாம் நீ செய்யக்கவனமாயிருக்கும்படி, இரவும் பகலும் அதைத் தியானித்துக் கொண்டிருப்பாயாக; அப்பொழுது நீ உன் வழியை வாய்க்கப் பண்ணுவாய், அப்பொழுது புத்திமானாயும் நடந்து கொள்ளுவாய்”** யோசுவா 1:8. நீங்கள் செல்லுமிடமெல்லாம் வெற்றியடையவும், ஆசீர்வதிக்கப்படவும் வேதவார்த்தையை வாசித்து, தியானித்து, அதன்படி செயல்படுவது அவசியம். அதுதான் தேவனுடைய வாக்குத்தத்தம். தேவன் பொய் சொல்ல மனிதரல்லவே. தேவனுடைய வார்த்தை நமது வாழ்க்கையோடு இரண்டறக் கலந்துள்ள அளவுக்கு, நாமும் வெற்றியும், ஆசீர்வாதமும் உடையவர்களாயிருப்போம். நமது வெற்றிக்கும், செழிப்பான வாழ்வுக்கும் வேதம் அளிக்கும் ஒரே திறவுகோல், வேத வார்த்தையின்படி காணப்படும் வாழ்க்கையாகும்.

## 4. சாஸ்திரிகள் அர்ப்பணித்தனர்!

**அவர்கள் அந்த வீட்டுக்குள் பிரவேசித்து, பிள்ளையையும் அதின் தாயாகிய மரியாளையும் கண்டு, சாஷ்டாங்கமாய் விழுந்து அதைப் பணிந்துகொண்டு, தங்கள் பொக்கிஷங்களைத் திறந்து, பொன்னையும் தூபவர்க்கத்தையும் வெள்ளைப்போளத்தையும் அதற்குக் காணிக்கையாக வைத்தார்கள்.** மத்தேயு 2:11. சாஸ்திரிகள் என்பவர்கள் பெர்சிய நாட்டைச் சேர்ந்த ஈரான் அல்லது ஈராக் பகுதியிலிருந்து வந்த அரசு ஆலோசகர்கள் அல்லது வான சாஸ்திரிகள் போலத் தெரிகிறது. தானியேலும் பாபிலோன் சாம்ராஜ்யத்தில் இவ்விதமாகப் பயிற்சி பெற்ற ஒரு சாஸ்திரியாகக் காணப்பட்டார். கிழக்கிலிருந்து வந்த இந்த ஞானிகள் நன்கு கற்றறிந்தவர் களும், அறிஞர்களுமாயிருந்தனர். அவர்கள் வானியல், மருத்துவம், இலக்கியம், மொழிகள் ஆகிய துறைகளில் வல்லுநர்களாயிருந்தனர். அக்காலத்தில் பூமியிலிருந்தவர்களுக்குள் அதிகம் படித்தவர்களாயிருந்தனர். நாம் முன்பு தியானித்த மேய்ப்பர்களிலிருந்து முற்றிலும் வேறுபட்டவர்கள். இந்த ஞானிகள் கிழக்கிலிருந்து பெத்லகேமுக்குப் பயணித்து வந்தனர். ஈரான், ஈராக், பெர்சியா, பாபிலோன் போன்ற தொலைதூர நாடுகளிலிருந்து பயணித்து வர அதிக பணமும், நேரமும் செலவாகியிருக்கும்; அவ்வளவு பணம் செலவு செய்ய அவர்கள் செல்வந்தர்களாயிருந்தனர். செலவுடன் கூடிய இத்தொலைதூரப் பயணத் திற்கு காரணம் இது ஒரு அறிவு சார்ந்த முயற்சியாயிருந்தது.

ஞானிகள் வானத்தில் ஒரு நட்சத்திரத்தைக் கண்டு, அதனைக் குறித்து ஆராய்ந்து, வேதவாக்கியங்களில் படித்து, பாரம்பரியங்களைக் கண்டு அறிந்து கொண்டனர். உலக இரட்சகர் பெத்லகேமில் பிறந்ததின் அடையாளம் இது எனக்கண்டறிந் தனர். ஆதலால் மிகுந்த பணத்தையும், நேரத்தையும் செலவழித்து அவர்கள் பெத்லகேமுக்கு வந்தனர். அவர்கள் சத்தியத்தைத் தேடினர்; தேவனைத் தேடினர்; அதுதான் என்றுமே ஞானமுள்ள செயல். நண்பர்களே! நீங்கள் சத்தியத்தைத் தேடுகிறீர்களா? அப்படியானால் இயேசுவிடம் வாருங்கள். அவர் உங்களை ஏற்றுக்கொள்ள ஆயத்தமாயிருக்கிறார். இயேசுவிடம் வர சிறப்பான எதையும் நீங்கள் செய்ய வேண்டாம். நீங்கள் இருக்கிற நிலையிலேயே அவரிடம் வாருங்கள். ஞானிகள் இன்றும் இயேசுவைத் தேடுகின்றனர். அவர்கள் எப்பொழுதுமே அவரைத் தேடுகின்றனர். ஞானமற்றவர்கள் இயேசுவைத் தேடுவதில்லை; மேலும் எவரும் தவிர்க்க முடியாத மரணத்தை அவர்கள் சந்திப்பதற்கு ஆயத்தமின்றிக் காணப்படுகின் றனர். மதிகேடர்கள் தங்கள் வாழ்க்கை நெடுகவே எதையும் எதிர்கொள்ள ஆயத்த மின்றிக் காணப்படுகின்றனர்.

சாஸ்திரிகள் அந்த வீட்டுக்குள் பிரவேசித்து பிள்ளையையும், அதின் தாயாகிய மரியாளையும் கண்டு, சாஷ்டாங்கமாய் விழுந்து அவரைப் பணிந்து கொண்டு, தங்கள் பொக்கிஷங்களைத் திறந்து, பொன்னையும், வெள்ளைப்போளத்தையும், தூபவர்க்கத்தையும் அவருக்குக் காணிக்கையாக வைத்தார்கள். **அவர்கள் அந்த வீட்டுக்குள் பிரவேசித்து, பிள்ளையையும் அதின் தாயாகிய மரியாளையும் கண்டு, சாஷ்டாங்கமாய் விழுந்து அதைப் பணிந்துகொண்டு, தங்கள் பொக்கிஷங்களைத் திறந்து, பொன்னையும் தூபவர்க்கத்தையும் வெள்ளைப்போளத்தையும் அதற்குக் காணிக்கையாக வைத்தார்கள்.** மத்தேயு 2:11.

ஞானிகள் வீட்டிலிருந்த மரியாளை யல்ல, பிள்ளையாகிய இயேசுவைப் பணிந்து கொண்டனர். பின்பு தங்களது பொக்கிஷங் களைத் திறந்து பொன், வெள்ளைப்போளம், தூபவர்க்கம் ஆகிய வெகுமதிகளை கிறிஸ்துவுக்குப் படைத்தனர். இம்மூன்று வெகுமதிகளும் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து தமது வாழ்வு, மரணம், உயிர்த்தெழுதல் மூலமாக நமக்குச் செய்தவைகளை விளக்குகிறது. **பின்பு, அவர்கள்**

தொடர்ச்சி 9-ம் பக்கம்.....

**வருமான வரி விலக்கு – ஏழை மக்களின் கல்வி மற்றும் மருத்துவ உதவிகளுக்கு**

இந்திய வருமான வரிச்சட்டம் பிரிவு 80G–கீழ் ஏழை, எளியோருக்கு மருத்துவம் மற்றும் சமுதாய முன்னேற்றத்திற்கான உதவி செய்வதற்காக “அழைப்பின் எதிரொலி” அறக்கட்டளைக்குத் தனிநபர் மற்றும் ஸ்தாபனங்கள் தரும் நன்கொடைகள் வருமான வரிச்சட்டப் பிரிவு 80G–யின் கீழ் வரிவிலக்குப் பெறத் தகுதியுடையவை. வருமான வரிக் கணக்குகளுக்கான அலுவலக இரசீது நம் அலுவலகத்திலிருந்து வழங்கப்படும். அப்படிப்பட்ட நன்கொடைகளுக்கான பணவிடைத்தாள்களை (Demand Drafts) “Echo of His Call Educational Trust” என்ற பெயருக்கு எடுத்து அனுப்பும்போது **ஆதார் மற்றும் பான் (PAN) நம்பர்களை தெரியப்படுத்தி வருமானவரி விலக்கு பெறுங்கள்.** மேலும் விபரம் வேண்டுவோர் எங்களுடன் தொடர்பு கொள்ளவும்.

| | |
|---|---|
| Account Name | : ECHO OF HIS CALL EDUCATIONAL TRUST |
| Account Number | : 1023 2923 805 |
| Bank Name | : STATE BANK OF INDIA |
| Branch | : TRIPLICANE, CHENNAI - 600 005 |
| IFSC Code | : SBIN 0000249 |
| SWIFT Code | : SBI NIN BB 455 |



# ஆழக்குழியிலிருந்து அரண்மனைக்கு!

# PIT TO PALACE

(போதகர் எஸ். சாம் செல்வ ராஜ் அவர்களின் வாழ்க்கை அனுபவங்கள்)

வாசிக்கிறவன் சிந்திக்கக்கடவன் (மத்தேயு 24:15)

## பெலவீனர்களின் ஜெபத்தைக் கேட்கும் தேவன்!

## GOD ANSWERS THE PRAYER OF THE WEAK!

கர்த்தருடைய கிருபையால் 10.08.1969 முதல் சுவிசேஷ ஊழியம் ஆரம்பித்து ஊழியப் பயிற்சியுடன் சுவிசேஷப் பிரசுர விநியோகம், ஜெபக் கூட்டங்கள் நடத்துதல், சபைகளில் செய்தியளித்தல் போன்ற ஊழியங்களைச் செய்து வந்தேன்.




நான் இளைஞனாக இருந்தபடியாலும், ஊழியத்தில் புதிய நபராக அறிமுகமானபடியாலும், என்னை ஒரு தேவ ஊழியனாக பலரும் ஏற்றுக் கொள்ள முன்வரவில்லை. எனவே, இந்த ஊழியப் பாதையைத் தொடருவதற்குப் பொருளாதாரம் ஒரு பெரிய தடையாக இருந்தது. இதன் விளைவாகத் தினந்தோறும் பல மைல்தூரம் கால்நடையாய் நடந்து ஊழியம் செய்ய வேண்டியதாயிற்று. பசியும், நீண்ட நடைபயணங்களும் எனது அனுதின அனுபவமாயிற்று. ஊழியம் செய்யவும், ஊழியத்திற்குத் தேவையான உபகரணங்களை வாங்குவதிலும் பணம் அதிகமாகத் தேவைப்பட்டது.

ஊழியம் என்ற போர்வையில் என் நண்பர், உறவினர், அயலகத்தார் போன்ற எவரிடமும் பணம் கேட்கக் கூடாது என்பதிலும், தேவன் என்னை ஊழியத்திற்கு அழைத்தபடியால் என் எல்லாத் தேவைகளையும் அவரே சந்திக்க வேண்டும் என்பதிலும் நான் அந்த நாட்களிலேயே மிகவும் உறுதியாக இருந்தேன். அந்த நம்பிக்கையில் இதுவரை உறுதியாக நிற்கும்படி தேவன் ஒத்தாசை புரிந்துள்ளார். இந்த உறுதியைக் கடைப்பிடிக்க சொல்லி முடியாத கஷ்டங்களையும், பெரிய சவால்களையும் சந்தித்தேன். ஒரு குறிப்பிட்ட சூழ்நிலையில் இனிமேல் சமாளிக்கமுடியாது என்ற நிலைக்குத் தள்ளப்பட்டு விட்டேன். மனரீதியிலும், உடல்ரீதியிலும் அதிகமாக பாதிக்கப்பட்டு சுகவீனம் அடையும் நிலைக்கு சென்றுவிட்டேன். என் உறவினராக இருந்த திரு. சொர்ணராஜ் அவர்கள் அரசு போக்குவரத்துத் துறையிலும், பாலப்பள்ளம், மத்திகோடில் வாழ்ந்த சகோ. காலின்ஸ் என்ற தேவஊழியர் தனியார் நிறுவனங்களிலும் என் வேலைக்காக முயற்சித்தனர். அவர்கள் வெற்றி பெறவில்லை.



இப்படி இருக்கையில் 17.05.1971 அன்று நான் உபவாசத்துடன் பகல் முழுவதும் ஜெபித்துக் கொண்டிருக்கும் போது தேவனுடைய ஆவியானவர் என் மேல் பிரத்தியட்சமாய் இறங்கினார். ஓர் நிரந்தரமான வேலை கிடைக்க ஜெபிக்கும்படி தேவ ஆவியானவர் ஏவினார்.

நான் ஜெபிக்கும்போது "ஒரு மாத காலத்திற்குள் ஒரு நிரந்தரமான வேலையைத் தருவேன்; அதை வைத்துப் பிழைத்துக்கொள்" என்கிற விசுவாச உணர்வைப் பெற்றேன். **நாம் எதையாகிலும் அவருடைய சித்தத்தின்படி கேட்டால், அவர் நமக்குச் செவிகொடுக்கிறாரென்பதே அவரைப் பற்றி நாம் கொண்டிருக்கிற தைரியம். நாம் எதைக் கேட்டாலும், அவர் நமக்குச் செவிகொடுக்கிறாரென்று நாம் அறிந்திருந்தோமானால், அவரிடத்தில் நாம் கேட்டவைகளைப் பெற்றுக்கொண்டோமென்றும் அறிந்திருக்கிறோம்.** 1 யோவான் 5:14,15. இதன்படி ஜெபத்தில் நீங்கள் கேட்பவற்றையெல்லாம் பெற்றுக் கொண்டோம் என்று அறிந்து கொள்ளுங்கள் என்கிற வசனத்தை விசுவாசித்து அதை உறுதியாய்ப் பற்றிக் கொண்டு, புதிய வேலை ஒன்று எனக்குக் கிடைத்ததாக அறிந்ததைப் போல், அதனை செய்வதற்காக முன் ஆயத்தங்களைச் செய்ய ஆரம்பித்தேன்.



என் நடவடிக்கைகளைப் பார்த்த பலர் என் மனநிலையை சந்தேகிக்க ஆரம்பித்து விட்டனர். நான் அவர்களைப் பாராமல் ஆண்டவரை முழுமையாக விசுவாசித்தேன்.


நாட்கள் கடந்து சென்றன. ஒவ்வொரு நாளும் முழு நிச்சயத்துடன் தபால்காரரை எதிர்நோக்கிக் காத்திருந்தேன். சரியாக, ஒரு மாதம் கடந்தமறுநாள் அதாவது, சரியாக 18.6.1971 அன்று நான் ஆண்டவர் மேல் உள்ள விசுவாசத்துடன் தபால் நிலையத்துக்கு நேராகச் சென்றேன்.



என்னைப் பார்த்ததும், தபால்காரராக இருந்த திரு. நெல்லையப்பன் தபால் எதுவும் இல்லை என்று கை சைகை மூலம் கூறிவிட்டார். நான் சற்றும் மனந்தள



1994–ல் வேலையை விட்டு விலகும்போது என்னுடன் பணிபுரிந்தவர்களுடன்





**1994–ம் ஆண்டு அரசுப்பணியிலிருந்து ஓய்வு பெறும்போது தொழிற்சாலைகளின் தலைமை ஆய்வாளர் திரு. ஏ. செண்பகம் B.E., மற்றும் என்னுடன் பணிபுரிந்தோர்கள்**

ராமல் ஆண்டவரையும், அவருடைய வாக்குத்தத்தத்தையும் உறுதியாய்ப் பற்றிக்கொண்டு அங்கேயே உட்கார்ந்து ஜெபித்துக் கொண்டிருந்தேன்.

என்ன ஆச்சரியம்? சற்று நேரத்தில் அதே தபால்காரர், “சாம், உங்களுக்கு ஒரு பதிவுத் தபால் வந்திருக்கிறது. கையெழுத்திட்டு பெற்றுக்கொள்ளுங்கள்” என்றார்.

அக்கடிதத்தைப் பிரித்துப் பார்த்தால், சென்னை பப்ளிக் சர்வீஸ் கமிஷன் அலுவலகத்திலிருந்து, தொழிலாளர் துறையில் பணி நியமன உத்தரவு அதில் இருந்தது. எப்போதோ சில வருடங்களுக்கு முன் நான் எழுதிய தேர்வுக்கான முடிவு ஊக்கமான ஜெபத்தால் துரிதப்படுத்தப்பட்டு, அற்புதம் நடந்தது. ஜெபம் ஓர் அற்புதமான ஆவிக்குரிய ஆயுதம்.

மிக சந்தோஷத்துடன் சென்னை வந்து, அரசாங்க உத்தியோகத்தில் சேர்ந்து, அதன் மூலம் வந்த சம்பளத்தின் பெரும் பகுதியை ஊழியத்தில் முதலீடு செய்து, ஆண்டவருடைய ஊழியங்களைச் செய்ய ஆண்டவர் எனக்கு உதவி செய்தார்.

இதே அரசுப்பணியை விட்டு விட்டு முழுநேரமாக தேவப்பணி செய்ய தேவன் 1994–ஆம் ஆண்டு கட்டளையிட்டதின் பேரில் அதனை உடனடியாக விட்டு விட்டு முழுநேர தேவப்பணி செய்து வருகிறேன்.

நம் கர்த்தர் இயேசு நல்லவர். காலம் தவறாதவர்! அவரை உறுதியாய் நம்பிப் பற்றிக் கொள்ளுங்கள்!! உங்களுக்கும் வெற்றி கிடைக்கும்!!! அவர் இன்று உங்களை உற்று கவனிக்கிறார்.

**உம்மை உறுதியாய்ப் பற்றிக்கொண்ட மனதையுடையவன் உம்மையே நம்பியிருக்கிறபடியால், நீர் அவனைப் பூரண சமாதானத்துடன் காத்துக் கொள்வீர்.** ஏசாயா 26:3.

***

... 7–ம் பக்கத் தொடர்ச்சி

**ஏரோதினிடத்திற்குத் திரும்பிப் போகவேண்டா மென்று, சொப்பனத்தில், தேவனால் எச்சரிக்கப் பட்டு, வேறு வழியாய்த் தங்கள் தேசத்திற்குத் திரும்பிப் போனார்கள்.** மத்தேயு 2:12. நீங்கள் இயேசுவோடு இணைந்திருக்கும்போதெல்லாம் உங்களது வழி மாற்றப்படுகிறது. தேவன் நமது வாழ்க்கையிலிருக்கும்போது, நம் வாழ்வில் நம்முடைய நடக்கை, கிரியைகளை மாற்றாமலிருக்க முடியாது. தேவன் உங்களது வாழ்க்கையில் காணப்படுகிறாரென்றால் நீங்கள் நிச்சயம் மாற்றத்தைக் காண்பீர்கள். மிகவும் பெரியவரான தேவன் உங்களது பாதையை மாற்றாமல் உங்களுக்குள் வாசம் பண்ண இயலாது.

ஞானிகள் இயேசுவை காண விலைக்கிரயம் செலுத்த வேண்டியிருந்தது. ஆனால், அவரைக் கண்டபோதோ அவர்கள் பணிந்து கொண்டனர். அவர்கள் தங்களது வெகுமதிகளையும், தங்களையும் தேவனுக்கு அர்ப்பணித்தனர்; அவ்வாறே நீங்கள் ஆசீர்வதிக்கப்பட உங்களையும், உங்களது நேரம், தாலந்துகளையும் தேவனுக்கு அர்ப்பணியுங்கள். ஞானிகள் இயேசுவுக்கு வெகுமதிகளை அளித்தனர். நம்மிடம் இருப்பதெல்லாம் அவரிடமிருந்து பெற்றுக் கொண்டவைகளே. ஆண்டவரிடமின்றி வேறு யாரிடமிருந்தும் நாம் எதையும் பெற்றுக் கொள்ள இயலாது. ஆகையால், நாம் அவரிடமிருந்து பெற்றுக் கொண்டவைகளிலிருந்து அவருக்கே திரும்ப வும் அளிக்கிறோம் என்பதுதான் உண்மை. ஆண்டவருக்குத் தேவை வெகுமதிகளல்ல, நம்மையே ஜீவபலியாகப் படைப்பது தான் மிகச் சிறந்த வெகுமதியாகும். **... உங்கள் சரீரங்களைப் பரிசுத்தமும் தேவனுக்குப் பிரியமுமான ஜீவபலியாக ஒப்புக் கொடுக்க வேண்டுமென்று, தேவனுடைய இரக்கங்களை முன்னிட்டு உங்களை வேண்டிக்கொள்ளுகிறேன்; இதுவே நீங்கள் செய்யத்தக்க புத்தியுள்ள ஆராதனை.** ரோமர் 12:1. ஆகையால், நம்மையும் நமக்குரிய வைகளையும் தேவனுக்கு அர்ப்பணிப்போம்.

“நீங்கள் உங்கள் அவயவங்களை அநீதியின் ஆயுதங்களாகப் பாவத்திற்கு ஒப்புக் கொடாமல், நீதியின் ஆயுதங்களாக தேவனுக்கு ஒப்புக்கொடுங்கள்” **நீங்கள் உங்கள் அவயவங் களை அநீதியின் ஆயுதங்களாகப் பாவத்திற்கு ஒப்புக் கொடாமல், உங்களை மரித்தோரிலிருந்து பிழைத்திருக்கிறவர்களாகத் தேவனுக்கு ஒப்புக்கொடுத்து, உங்கள் அவயவங்களை நீதிக்குரிய ஆயுதங்களாகத் தேவனுக்கு ஒப்புக் கொடுங்கள்.** (ரோமர் 6:13). இதைவிட ஞானமுள்ள செயல் ஒன்று மில்லையே. அழிந்து போகிறவைகளுக்காக அல்ல, ஒரு போதும் அழியாததும், நிலைத்திருப்பவைகளுக்கும் நம்மை அர்ப்பணிப்பதே ஞானமுள்ள செயலாகும். தேவனுடைய நோக்கத்திற்காக நீங்கள் பயன்படுத்தப்பட அவரது கரங்களில் கருவிகளாக உங்களை முற்றிலுமாக அர்ப்பணியுங்கள்.

## நீங்கள் ஆண்டவருக்கு என்ன கொடுப்பீர்கள்?

இப்பண்டிகைக் காலத்தில் உங்கள் நண்பர்களுக்குப் பரிசளிக்க காலத்தையும், பணத்தையும் செலவழிப்பீர்கள். இது கிறிஸ்து பிறப்பின் நினைவு கூறும் காலம். அவருக்குக் கொடுக்க உங்களிடம் உள்ளது யாது? ஒரு பிறந்தநாள் நிகழ்ச்சியில் எல்லோரும் ஒருவருக்கொருவர் வெகுமதிகளை அளித்து, பிறந்தநாள் காணும் பிள்ளையை விட்டுவிட முடியாதே. ஆகையால், கிறிஸ்துவுக்கு உங்களை முற்றிலுமாக அர்ப்பணிப்பதே நீங்கள் அவருக்களிக்கும் மிகச் சிறந்த வெகுமதியாகும். உங்களது முழுமையான அன்பே, நீங்கள் அவருக்களிக்கும் மிகச் சிறந்த வெகுமதியாகும். அவர் உங்களது வெகுமதிகளை அன்போடு ஏற்றுக் கொள்வார்.

கிறிஸ்மஸ் வெகுமதியளிக்கும் பாரம்பரியத்தை, ஞானிகள் துவக்கி வைத்தனர். ஆனால், தேவனோ தமது ஒரே பேறான குமாரனை நமக்கு ஈவாக அளித்துள்ளாரே. அவர்தான் முதல் கிறிஸ்மஸ் வெகுமதியை நமக்கு அளித்தார். காரணம் அவர் உலகத்தை நேசிக்கிறார். ஆகையால், அவரை விசுவாசிக்கும் ஒருவரும் கெட்டுப்போகாமல் நித்திய ஜீவனைப் பெற்றுக் கொள்ளும்படி அவரைத் தந்தருளினார். தேவனே முதல் கிறிஸ்மஸ் பண்டிகையின் வெகுமதியை நமக்களித்தார்.

RNI NO. 67380/93. Postal Regn. No. TN/CH/(C)/197/21-23 WPP NO. TN/PMG(CCR)/WPP-158/21-23

யோசேப்பு தேவ நோக்கத்தோடு ஒத்துழைத்தார். மேய்ப்பர்கள் தேவனைக் கொண்டாடி பிறருக்கும் அறிவித்தனர். மரியாள் தேவனுடைய வார்த்தையை மனதில் வைத்து சிந்தனை பண்ணினாள். ஞானிகள் தங்களது வெகுமதிகளை இயேசுவுக்கு அர்ப்பணித்தனர். **நண்பர்களே! நீங்கள் செய்ய வேண்டியதைத் தீர்மானியுங்கள். ஆண்டவரின் அளவற்ற ஆசீர்வாதங்களைப் பெற்று ஆசீர்வாதமாயிருங்கள்!**

************

## OUR BANK DETAILS:

### *1. Bank : State Bank of India*

| | | |
|---|---|---|
| Branch | : | **Triplicane, Chennai-5** |
| Name | : | **S. Sam Selva Raj** |
| A/C No. | : | **1023 2934 679** |
| IFSC | : | **SBIN 00 00 249** |
| SWIFT CODE | : | **SBI NIN BB 455** |

### *2. Bank : ICICI Bank*

| | | |
|---|---|---|
| Branch | : | **Anna Salai, Chennai-6** |
| Name | : | **Echo of His Call** |
| A/C No. | : | **6038 0502 2319** |
| IFSC | : | **ICIC 000 6038** |

### *3. Bank : State Bank of India*

**(This Account is for Tax Exemption for Indians only )**

| | | |
|---|---|---|
| Branch | : | **Triplicane, Chennai-5** |
| Name | : | **Echo of His Call Educational Trust** |
| A/C No. | : | **1023 2923 805** |
| IFSC | : | **SBIN 00 00 249** |

**Google Pay: 98410 71858**
**PayPal : SAM SELVA RAJ**

*****

E.mail : sam@echoofhiscall.org

# அழைப்பின் எதிரொலி ஊழியங்கள்

**மாதப் பத்திரிகை 16 மொழிகளில், வேதாகமக் கல்லூரிகள், தபால் வழிக் கல்விகள், சபைகளை ஸ்தாபித்தல், கிராம ஆங்கில உயர்நிலைப் பள்ளி, சுவிசேஷ அச்சகம், சுவிசேஷம், கருத்தாய்வுகள், சமூக சேவைகள் மற்றும் ஏனைய செயல்பாடுகள்**

**❀ வருட சந்தா ரூ. 100/–** **❀ ஆயுள் சந்தா ரூ. 2000/–**

☞ **அழைப்பின் எதிரொலி** ஊழியத்தின் பல்வேறு ஊழியங்கள், நமது பங்காளர்களால் அளிக்கப்படும் சுயவிருப்பக் காணிக்கை மற்றும் நன்கொடைகளினால் நடைபெற்று வருகின்றன. தேவன் உங்கள் உள்ளத்தில் அளித்த விருப்பத்தின்படி நமது ஊழியங்களைத் தாங்கும்படி கேட்டுக்கொள்கிறோம். சுவிசேஷம் சென்றடையாத இடங்களில் சுவிசேஷத்தினை கொண்டு சேர்த்திட மற்றும் சபைகள் ஸ்தாபிக்கப்பட உங்கள் உதவி எங்களுக்கு தேவை.

☞ உங்கள் விலாசம் அல்லது மின்னஞ்சல் மாறினால், உங்கள் பழைய விலாசத்தையும் புதிய விலாசத்தையும், புதிய மின்னஞ்சலையும், உங்கள் பதிவு எண்ணையும் உடனே எங்களுக்குத் தெரியப்படுத்துங்கள். **அழைப்பின் எதிரொலி** பத்திரிகை உங்களுக்குத் தவறாமல் கிடைக்க வேண்டுமானால் எங்களுக்குக் கடிதம் எழுதுங்கள்.

☞ நம் **அழைப்பின் எதிரொலி** பத்திரிகைகள் 16 மொழிகளிலும் நமது இணையதளங்களில் (Websites) வெளியாகின்றன. அவற்றிலிருந்து படித்தும், பதிவிறக்கம் செய்தும் பயன்பெறுங்கள்.

☞ உங்கள் கடிதங்கள், ஜெப விண்ணப்பங்கள், காணிக்கைகள் முதலியவற்றை காசோலை (Cheque), மணிஆர்டர் (M.O.) அல்லது டிமாண்ட் டிராப்ட் (D.D.) **NEFT, PayPal (Sam Selva Raj, sam@echoofhiscall.org) PhonePe (98410 71858), Gpay (98410 71858), Western Union, MoneyGram, etc.** மூலம் **Echo of His Call** என்ற பெயரில் கீழ்க்காணும் விலாசத்திற்கு அனுப்புங்கள். Online மூலமாகவும் அனுப்பலாம்.

☞ உங்கள் E.mail முகவரி மற்றும் செல்போன் / தொலைபேசி எண்களை எங்களுக்கு அனுப்புங்கள். தேவைப்படும்போது **அழைப்பின் எதிரொலி** பத்திரிகையை E.mail மூலம் அனுப்ப உதவியாக இருக்கும்.

**சகோதர, சகோதரிகளே எங்களுக்காக வேண்டிக் கொள்ளுங்கள்.** 1 தெசலோனிக்கேயர் 5:25.

**அழைப்பின் எதிரொலி,**

**10, முகமது அப்துல்லா 2–வது தெரு, சேப்பாக்கம், சென்னை – 600 005.**

தொலைபேசி : (+91 – 44) 2852 8282, 2852 9293, 2854 7766 செல்: (+91) 98410 71852, 95661 31858

**E.mails : sam@echoofhiscall.org / biblecor@yahoo.co.in**

**Websites : www.echoofhiscall.org / www.stpaulsmatriculation.com**

**YOU CAN SEND YOUR DONATION ONLINE ALSO**

**Regd. with the RNI under No. 67380/93**
**Licenced to post without pre-payment**
**Postal Regn. No. TN/CH/(C)/197/21-23**
**Licence No. WPP - TN/PMG(CCR)/WPP-158/2021-23**
**Date of Publication: last week of previous month**
**Date of Posting : 27th & 28th of previous month**
**Posted at "Egmore RMS / 1 Patrika Channel"**
**on 28th NOVEMBER 2022**
**If un-delivered please return to:**
**ECHO OF HIS CALL (TAMIL)**
**P.O. Box No. 2957, Chepauk, Chennai - 600 005, INDIA.**
**Phone: (+91-44) 2852 8282, 2852 9293, 2854 7766**

*JESUS LOVES YOU!*

**To**

*GOD BLESS YOU!*

Owned and published by **S. Sam Selva Raj** from New No. 8 & 10, Old No.18 & 19, Mohammed Abdullah 2nd Street, Chepauk, Chennai-600 005 and printed by him at **Echo of His Call Printers** New No. 8 & 10, Old No.18 & 19, Mohammed Abdullah 2nd Street, Chepauk, Chennai-600 005. Editor: **S. Sam Selva Raj.**